தமிழ்நாடு அமைச்சுப்பணி – ஊரக வளர்ச்சி அலகு – நில அளவைத் துறையில் நில உடமை மேம்பாட்டுத் திட்டம் (Updated Registry Scheme) தொகுப்பூதிய பணியாளர்களாக பணிபுரிந்து பணியிழந்த 229 நபர்களுக்கு ஊரக வளர்ச்சி அலகில் 1995 முதல் 1997 வரையில் தற்காலிக பணி நியமனம் – பணிவரன்முறை செய்யப்பட்டது – அரசாணை நீக்கம் செய்து ஆணை வெளியிடுதல் – திருத்திய அரசாணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ7) துறை

அரசாணை (நிலை) எண்.66 நாள் 12.05.2008.

படிக்கப்பட்டவை:

(1) அரசாணை (நிலை) எண்.248 வருவாய்த்துறை நாள் 23 .3.93.
(2) அரசாணை (நிலை) எண்.37, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 16.2.2000.
(3) ஊரக வளர்ச்சி இயக்குநர் கடிதம் எண்.70977/95/பி1, நாள் 25.2.98, 15.7.98, 19.1.99 மற்றும் 20.10.99.
(4) அரசு கடிதம் எண்.7603/பஅ7/98–12, நாள் 20.1.2000.
(5) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடித எண்.1863/சிடிஎ4/2000, நாள் 10.5.2000.
(6) அரசாணை நிலை எண்.85, ஊரக வளர்ச்சி (பஅ4) துறை, நாள் 19.5.2004.

**ஆணை**

மேலே ஆறில் படிக்கப்பட்ட அரசாணையை நிர்வாக காரணங்களின் அடிப்படையில் அரசு நீக்கம் செய்து ஆணையிடுகிறது. அதற்கு பதிலாக கீழ்க்கண்டவாறு திருத்திய அரசாணையை அரசு வெளியிடுகிறது.

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் நில அளவைத் துறையில் நில உடமை மேம்பாட்டுத் திட்ட (Updated Registry Scheme) தொகுப்பூதிய பணியாளர்களாக பணிபுரிந்து பின் பணியிழந்த நபர்களை அரசுப் பணியில் பல்வேறு துறைகளில் ஏற்படும் காலியிடங்களில் அவர்கள் கல்வி, வயது, ஆகிய தகுதிகளுக்கேற்ப முன்னுரிமை அளித்து பொது விதி 10 (a) (i) –ன்படி தற்காலிக பணி நியமனம் செய்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வு வரம்புக்குள் வரும் பணிகளைப் பொறுத்த மட்டில் 1954–ம் ஆண்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒழுங்குமுறை விதிகளில் விதி 16(பி)–யின் பிற்பகுதியின்படி தேர்வாணையத்தின் ஒத்திசைவினைப் பெற்று வயது வரம்பினைக் கடந்தவர்களாக இருப்பின் விதிகளைத் தளர்த்தி வரன்முறை செய்ய வேண்டும் என ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

3. மேற்குறிப்பிட்ட ஆணைகளுக்கிணங்க நில அளவைத் துறை நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தின் முடிவில் பணியிழந்த 173 நபர்களை ஊரக வளர்ச்சி அலகில் 1990 முதல் 1994 வரை 20 மாவட்டங்களில் இளநிலை உதவியாளர், தட்டச்சர் ஆகிய பதவிகளில் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்து மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன. அதன் தொடர்ச்சியாக நில அளவைத் துறை, நில உடமை மேம்பாட்டு திட்ட முடிவில் பணியிழந்த 232 நபர்களில் ஊரக வளர்ச்சி அலகில் 1995 முதல் 1997 வரை 16 மாவட்டங்களில் இளநிலை உதவியாளர் / காசாளர் / ஊர்நல அலுவலர் நிலை II / தட்டச்சர் ஆக தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட 232 நபர்களின் பணியினை வரன்முறை செய்யக் கோரும் கருத்துருவினை அவர்களது பணிவிவர குறிப்புகளுடன் ஊரக வளர்ச்சி இயக்குநர் மேலே

மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசிற்கு அனுப்பியுள்ளார். அதில் திண்டுக்கல், தேனி மாவட்டங்களைச் சார்ந்த இருவர் பணியினை வரன்முறை செய்ய இயலாமையினால் மீதமுள்ள **230** நபர்களின் பணிகளை, பணிவரன்முறை செய்யக் கோரும் ஊரக வளர்ச்சி இயக்குநர் கருத்துரு பரிசீலிக்கப்பட்டு அவர்கள் எந்த பதவியில் எந்த நாளிலிருந்து தற்காலிக பணி நியமனம் செய்யப்பட்டனரோ அந்த நாளிலிருந்து தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் சிறப்பு விதி **26** (இட ஒதுக்கீடு தொடர்பானது) **28** (வயது வரம்பு தொடர்பானது) மற்றும் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளின் பொது விதி 23(a)(ii) (முன் தேதியிட்டு பணிவரன்முறையினால் கிடைக்கக்கூடிய ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் இதர படிகள் பாக்கித் தொகையினை பெறுவது தொடர்பானது) ஆகிய விதிகளைத் தளர்த்தி தமிழ்நாடு அமைச்சுப் பணியில் முறையாக பணியமர்த்துவதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுமத்தின் இசைவு ஒழுங்குமுறை விதிகள் **1954**–ல் விதி **16** (பி) பிற்பகுதியின்படி கோரப்பட்டது.

**4.** தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுமம் மேலே ஐந்தில் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் மேற்குறிப்பிட்ட **230** நபர்களில் **89** நபர்கள் குறைந்தபட்ச கல்வித் தகுதிக்கு மேல் அதிகபட்ச கல்வித் தகுதி பெற்றிருப்பதாலும் அவர்கள் பிற்பட்ட / மிகவும் பிற்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் என்பதாலும் இவர்கள் பொருட்டு வயது வரம்பை தளர்த்த தேவையில்லை எனவும் மீதமுள்ள **141** நபர்களுக்கு மட்டுமே வயது வரம்பினைத் தளர்த்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் **14.2.1995**–க்குப் பிறகு இளநிலை உதவியாளர் ஆக நியமனம் செய்யப்பட்டவர்கள் தட்டச்சுத் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற அறிவுறுத்தலுடன் **1954**–ம் ஆண்டின் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதி **16**(பி) பிற்பகுதியின்படி தனது இசைவினைத் தெரிவித்துள்ளது.

**5.** மேற்குறித்த சூழ்நிலையில் ஊரக வளர்ச்சி இயக்குநரது பரிந்துரைகளை கவனமான பரிசீலனைக்குப் பின்னர் அரசு ஏற்று அரசாணை (நிலை) எண்.**248**, வருவாய்த்துறை, நாள் **23.3.93**–ல் வெளியிட்ட ஆணையின்படி நில அளவைத் துறை, நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தின் முடிவில் பணியிழந்து ஊரக வளர்ச்சி அலகில் **1995** முதல் **1997** வரை தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட நபர்களில் திரு.நிஜானந்தன் என்பவரின் கல்வித் தகுதி பற்றி அறிய இயலாமையினால் அவரது பெயர் நீங்கலாக ஏனைய இணைப்பு I –ல் மற்றும் இணைப்பு II–ல் குறிப்பிடப்பட்டுள்ள **229** நபர்களது பணியினை தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் இசைவு தந்தவாறு இணைப்பு I-ல் குறித்த **140** நபர்களைப் பொறுத்தவரை தமிழ்நாடு அமைச்சுப் பணியின் சிறப்பு விதி **26** (இட ஒதுக்கீடு தொடர்பானது) விதி **28** (வயது வரம்பு தொடர்பானது) இவற்றை தளர்த்தியும் இணைப்பு II –ல் குறித்த இதர **89** நபர்களைப் பொறுத்தவரை தமிழ்நாடு அமைச்சுப் பணியின் சிறப்பு விதி **26**–ஐ (இட ஒதுக்கீடு தொடர்பானது) தளர்த்தி அவர்கள் ஊரக வளர்ச்சித் துறையில் இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை II / காசாளர் / தட்டச்சர் ஆக தற்காலிகமாக பணியேற்ற நாள் தொடங்கி அவர்களது பணியினை வரன்முறை செய்ய அவர்கள் தேவையான உடல் தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் அரசு ஆணையிடுகிறது.

**6.** மேலே ஆறில் படிக்கப்பட்ட அரசாணையில் நில அளவைத் துறையிலிருந்து ஊரக வளர்ச்சித் துறைக்கு ஈர்த்துக் கொள்ளப்பட்ட **229** நபர்களின் பணியை அவர்கள் ஊரக வளர்ச்சித் துறையில் பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்தும், **19.3.2004** முதல் பணப்பயன் கிடைக்கும் வகையில் ஆணை வெளியிடப்பட்டது. ஆனால், இவ்வாணைக்கு முன்பாக வெளியிடப்பட்ட மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் பணப்பயன் பெறும் நாள் குறிப்பிட்டு ஆணைகள் வெளியிடப்படவில்லை. எனவே மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணைகளின் அடிப்படையில் முன்நாளிட்டு வரன்முறை செய்யப்பட்டவர்களுக்கு, தகுதிகாண் பருவம் விளம்பி, பணப்பயன் துறைத்தேர்வில் தேர்ச்சி பெற்ற நாளுக்கு அடுத்த நாள் முதல் கிட்டுமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

7. தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணி விதிகளின் கீழுள்ள பொதுவிதிகளின்படி அரசுப் பணியாளர்களில் பணிவரன்முறை செய்யப்பட்டவர்களுக்கு அவர்கள் துறைத் தேர்வில் இறுதியாக தேர்ச்சி பெறும் நாள் வரை தகுதிகாண் பருவம் நீட்டித்தும் / திருப்திகரமாக தகுதிகாண்பருவம் விளம்பியும் அதற்கு அடுத்த நாள் முதல் பணப்பயன் வழங்கியும் ஆணையிட வேண்டும். மேலே 6–ல் படிக்கப்பட்ட அரசாணையின்படி 19.3.2004 முதல் பணப்பயன் வழங்க ஆணையிட்டதின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட 229 நபர்களில் சிலர் 19.3.2004–க்கு முன்பாகவும் சிலர் 19.3.2004–க்குப் பின்பும் துறைத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். எனவே 19.3.2004–க்கு முன்பு ஊரக வளர்ச்சித் துறைத்தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு பணப்பயன் 19.3.2004 நாள் முதற்கொண்டும் 19.3.2004–க்கு பின்னர் ஊரக வளர்ச்சித் துறை தேர்வில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு அவர்கள் துறைத்தேர்வில் தேர்ச்சி பெற்ற நாளுக்கு அடுத்த நாள் முதல் பணப்பயன் வழங்கி ஆணையிடப்பட்டது. இதன் விளைவாக நிர்வாக சிக்கல்கள் ஏற்பட்டன. பொது விதிப்படி துறைத் தேர்வில் தேர்ச்சி பெறும் நாளன்று தகுதிகாண் பருவம் விளம்பியும் அதற்கடுத்த நாள் முதல் பணப்பயன் வழங்கியும் ஆணையிடவேண்டும். அவ்வாறின்றி ஒரே சூழ்நிலையில் நில அளவைத் துறையிலிருந்து இத்துறைக்கு ஈர்த்துக் கொள்ளப்பட்ட பணியாளர்களில் ஒரு பிரிவினருக்கு அவர்கள் துறைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற நாளுக்கு அடுத்த நாள் முதல் பணப்பயனும் மற்றொரு பிரிவினருக்கு 19.3.2004 முதல் பணப்பயன் அளித்தலும் இயற்கை நியதிக்கு மாறானது.

8. மேலே விவரிக்கப்பட்ட காரணங்களை அரசு நன்கு ஆய்வு செய்து, இவ்வரசாணையில் பணிவரன்முறை செய்யப்படும் அனைவருக்கும் தற்போது இத்துறையில் நடைமுறையில் உள்ளவாறு ஒரு பணிவிதியின் கீழ் வரையறுக்கப்பட்ட ஊரக வளர்ச்சித் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற நாளின் பிற்பகல் அவர்களுடைய தகுதிகாண் பருவத்தை விளம்பிடவும் அதற்கு அடுத்த நாள் முதல் பணப்பயனை பெறுவதற்கு ஏதுவாகவும் பொதுவிதி 23(a) (ii)–ஐ தளர்த்திடவும் முடிவு செய்தது.

9. மேற்குறிப்பிட்ட மொத்த நபர்கள் 229–ல் இணைப்பு 1–ல் குறிப்பிட்ட 140 நபர்கள், அவர்கள் ஊரக வளர்ச்சித் துறையில் இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை II /காசாளர் / தட்டச்சர் ஆக பணியில் சேர்ந்த நாள் முதல் முறையாக பணியமர்த்தும் பொருட்டு 1987–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணி விதி தொகுதி I பாகம் II –ல் அடங்கியுள்ள பொது விதி 48–ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தமிழ்நாடு அமைச்சுப் பணியின் சிறப்பு விதி 26 (இட ஒதுக்கீடு தொடர்பானது), மற்றும் விதி 28 (வயது வரம்பு தொடர்பானது) –ஐ தளர்த்தியும் இணைப்பு II–ல் குறிப்பிட்ட 89 நபர்கள் பொருட்டு தமிழ்நாடு அமைச்சுப் பணியின் சிறப்பு விதி 26–ஐ (இட ஒதுக்கிடு தொடர்பானது) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணிகளுக்கான பொதுவிதி 23(a)(ii)–ஐயும் தளர்த்தி மேதகு ஆளுர் தமிழ்நாடு அவர்கள் ஆணையிடுகிறார். அவ்வாறே அரசும் ஆணையிடுகிறது.

10. அவரவர் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற நாளுக்கு அடுத்த நாள் முதல் பணப்பயன் வழங்கப்படவேண்டுமெனவும் அரசு ஆணையிடுகிறது. இதனடிப்படையில் வழங்கப்படவேண்டிய தொடர் ஊதிய உயர்வு மற்றும் அனைத்து பணப்பயன்களையும், நிலுவை உட்பட உரிய பணியாளர்களுக்கு வழங்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

11. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 26402/ஊரக வளர்ச்சி/08 நாள் 6.5.08–ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,**
சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்.

# இணைப்பு – I

காஞ்சிபுரம் மாவட்டம்

திரு / திருமதி/ செல்வி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கு.மணி | 2. | த.அ.அருணா | 3. | அ.கோமதிநாயகம் |
| 4. | மா.முருகேசன் | | | | |

திருவள்ளூர் மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. | எம்.மனோகரன் | | | | |

தஞ்சாவூர் மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | வி.சன்னாசி | 7. | ப.ராதாகிருஷ்ணன் | 8. | எஸ்.பால்பாண்டியன் |
| 9. | ஆர்.அறிவானந்தம் | 10. | பி.பிச்சை | 11. | எம்.மாணிக்கம் |
| 12. | பா.அசோகன் | | | | |

திண்டுக்கல் மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | கே.கருப்பையா | 14. | ஆர்.ரெஜினா | 15. | எஸ்.பாண்டியம்மாள் |
| 16. | எம்.பழனிசுந்தரம் | 17. | எம்.ராஜு | 18. | சி.சமுத்திரபாண்டி |
| 19. | என்.முருகேசன் | 20. | பி.ராஜா | 21. | வி.பி.கே.சந்திரசேகரன் |
| 22. | ஆர்.முருகன் | 23. | எஸ்.திருமலை | 24. | ஆர்.பாலசுப்பிரமணியன் |
| 25. | எஸ்.சண்முகசுந்தரி | 26. | ஜ.ரவீந்திரன் | 27. | கே.சத்தியமூர்த்தி |
| 28. | எஸ்.ராமசாமி | 29. | வி.ராமதிலகம் | 30. | என்.சேர்முகராஜன் |

இராமநாதபுரம் மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 31. | எம்.பழனியாண்டி | 32. | ஞா.ஞானமலர் | 33. | பா.ஜெகேந்தர் |
| 34. | ஆர்.ரவி | 35. | எஸ்.மோகன் | 36. | வி.சீனிவாசன் |
| 37. | பெ.சிதம்பரம் | | | | |

கரூர் மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 38. | அ.சகாய கிருஸ்டிராஜ் | | | | |

மதுரை மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 39. | எம்.கிருஷ்ணமூர்த்தி | 40. | ஆர்.பிரேமா | 41. | ஏ.டி.கோவிந்தராஜன் |
| 42. | எம்.வி.கமலநாதன் | 43. | எ.தர்மலிங்கம் | 44. | கே.சண்முகம் |
| 45. | ரா.டாரதி நல்லம்மாள் | 46. | எம்.ஆதிமூலம் | | |

விருதுநகர் மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 47. | த.காளி | 48. | ஆ.முனுசாமி | 49. | த.கோபாலகிருஷ்ணன் |
| 50. | பா.பாலசுப்பிரமணியன் | 51. | வே.சக்திகணபதி | 52. | பி.ராமலட்சுமி |
| 53. | ஆ.சங்கர் | 54. | ஆர்.பாலமுருகன் | 55. | வே.மாணிக்கம் |

ஈரோடு மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 56. | ஆர்.ராஜாராம் | 57. | ஆர்.சித்தையன் | 58. | கி.பாஸ்கரன் |
| 59. | எல்.இளஞ்செழியன் | 60. | கே.சக்திவீரன் | 61. | கே.நாகசுந்தரகண்ணன் |
| 62. | எஸ்.சம்பத் | 63. | டி.செல்வராஜ் | 64. | எஸ்.சூரியகுமாரி |
| 65. | எல்.மாரியப்பன் | | | | |

வேலூர் மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 66. | எம்.மரியதாஸ் | 67. | மா.வெங்கடேஸ்வரன் | | |

சிவகங்கை மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 68. | எஸ்.சங்கரன் | 69. | எஸ்.ஆண்டியப்பன் | 70. | வே.சிவசுப்பிரமணியன் |
| 71. | ஜி.சோணைமுத்து | 72. | டி.பிச்சைமணி | 73. | எம்.மயில்சாமி |

திருநெல்வேலி மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 74. | ஆர்.கதிர்வேலு | 75. | எ.திருஞானசம்பந்தம் | 76. | என்.ராமமூர்த்தி |
| 77. | கே.பொன்னுசாமி | 78. | பி.நாகராஜன் | 79. | சி.பாஸ்கரன் |
| 80. | ஆர்.ஆறுமுகம் | 81. | பி.கண்ணன் | 82. | என்.சுப்பிரமணியன் |
| 83. | எம்.ஆர்.பெரியசாமி | 84. | பி.திருமூர்த்தி | 85. | ஆர்.ராஜேந்திரன் |
| 86. | ஜி.மாசிலாமணி | 87. | ஆர்.பன்னீர்செல்வம் | 88. | என்.முத்தையா |

தர்மபுரி மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 89. | பி.சௌந்தரவள்ளி | 90. | எம்.கிரிஜா | 91. | எஸ்.ஸ்ரீதரன் |
| 92. | எஸ்.ராஜேந்திரன் | 93. | சி.சதாசிவம் | 94. | டி.டெய்சிராணி |
| 95. | ஜி.முத்துசாமி | 96. | ஜி.கேசவன் | 97. | பி.சுதாகரன் |
| 98. | ஆர்.சின்னத்தம்பி | 99. | பி.இசக்கி | 100. | எ.சுப்புலட்சுமி |
| 101. | எஸ்.ராமையா | 102. | கே.எஸ்.இரவிக்குமார் | 103. | பி.என்.பன்னீர்செல்வம் |
| 104. | எஸ்.கோதண்டம் | 105. | எம்.சுப்பம்மாள் | 106. | கே.ஸ்ரீதரன் |
| 107. | கே.மணி | 108. | என்.இரவிச்சந்திரன் | 109. | ரா.அனந்த ராம விஜயரங்கம் |
| 110. | எ.முருகன் | 111. | சி.சூடேசன் | 112. | என்.இரவிச்சந்திரன் |
| 113. | வி.என்.முருகன் | 114. | எ.அமலி | | |

புதுக்கோட்டை மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 115. | எஸ். உதயசூரியன் | 116. | டி.லட்சுமி | 117. | க.கலாவதி |
| 118. | டி.அம்பிகாபதி | 119. | பி.சங்கர் | 120. | சி.சண்முகசுந்தரம் |
| 121. | என்.இஸ்மாயில் சேட் | | | | |

கன்னியாகுமரி மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 122. | சி.சகுந்தலா | 123. | பி.மதியழகன் | 124. | பி.கந்தசாமி |
| 125. | அ.ஜெயகரன் | | | | |

தேனி மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 126. | எஸ்.வடமலை முத்துராஜ் | 127. | எஸ்.ராஜேந்திரன் | 128. | ச.மணி |
| 129. | எல்.சேகர் | 130. | ஆர்.இக்பால் | 131. | பி.ஆறுமுகம் |
| 132. | வி.ரமேஷ் | 133. | எஸ்.சுப்பிரமணியன் | 134. | டி.விஜயகுமார் |
| 135. | எஸ்.கந்தசாமி | 136. | பி.கோபால் | 137. | ஜி.என்.பிரகாஷ் |
| 138. | கே.தங்கவேல் | 139. | டி.என்.கந்தசாமி | 140. | வா.வாசுதேவன் |

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,**
சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்.

## இணைப்பு – II

காஞ்சிபுரம் மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கோ.கமலேசன் | 2. | ஆர்.காளியப்பன் | | |

தஞ்சாவூர் மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | ஜி.பழனிச்சாமி | 4. | சி.சித்ரா | 5. | பி.சீனி |
| 6. | ஆ.முத்துச்சாமி | 7. | டி.எஸ்.ஏக்நாத் | 8. | எஸ்.லட்சுமி காந்தன் |
| 9. | ஆ.சந்தான மகாலிங்கம் | 10. | என்.மகேந்திரன் | 11. | என்.பாண்டியன் |
| 12. | க.நாகேந்திரன் | | | | |

திண்டுக்கல் மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | பி.டி.செல்வம் | 14. | ஆர்.சுப்புராஜ் | 15. | சி.ரத்னசாமி |
| 16. | கே.ராஜேந்திரன் | 17. | ஏ.சங்கர சுப்பிரமணியன் | | |

இராமநாதபுரம் மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 18. | ஆர்.சரோஜினிலிப்டன் | 19. | பி.பால்துரை | | |

கரூர் மாவட்டம்

20. கு.சுப்பிரமணி

மதுரை மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21. | பா.சிவசங்கரநாராயணன் | 22. | எஸ்.சுருளிராஜ் | 23. | வி.சாமிநாதராஜா |
| 24. | ஜெ.பன்னீர் செல்வம் | 25. | ஜே.சுந்தரராஜன் | 26. | சி.பரமசிவம் |
| 27. | எம்.வாசுகி | | | | |

விருதுநகர் மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 28. | அ.ஜெகநாதன் | 29. | கு.தங்கவேலு | 30. | சி.விஜயலட்சுமி |
| 31. | மு.சுப்பையா | 32. | இரா.சுப்பிரமணியன் | 33. | ஆர்.தங்கவேலு |
| 34. | சா.சுப்பிரமணியன் | 35. | எஸ்.சபாபதி | 36. | எஸ்.மோகன் |

வேலூர் மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 37. | ப.கிருஷ்ணன் | 38. | பொ.மீனாட்சிசுந்தரம் | 39. | வி.மாதேஸ்வரன் |
| 40. | நா. ருத்தரையன் | 41. | அ.சாந்தா | 42. | கி.செல்லப்பன் |
| 43. | ஜே.சேகர் | 44. | எம்.நேரு | 45. | வே.திருஞான சம்பந்தம் |
| 46. | பி.மணிவாசகம் | | | | |

ஈரோடு மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 47. | எம்.கணேசன் | 48. | பி.சாதிக்பாட்சா | 49. | கே.அசோகன் |
| 50. | வி.ராமசாமி | 51. | வி.முருகேசன் | 52. | வீ.முத்தையா |
| 53. | எஸ்.சி.மனோகரன் | 54. | எ.கணபதி | 55. | ஜி.நாகராஜன் |
| 56. | எம்.செல்வராஜன் | 57. | எல்.காமராஜ் | 58. | சி.பழனிக்குமார் |
| 59. | எஸ்.சுடலீசன் | | | | |

சிவகங்கை மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 60. | ஆ.அன்பழகன் | 61. | அ.குமார் | 62. | எம்.மணி |

திருநெல்வேலி மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 63. | எஸ்.ராஜசெல்வம் | 64. | பி.பாலகுருநாதன் | 65. | எ.சக்கரவர்த்தி |
| 66. | என்.கோவிந்தன் | 67. | கே.ராஜேந்திரன் | 68. | எஸ்.சுப்பிரமணியன் |
| 69. | என்.சுப்பிரமணியன் | 70. | எஸ்.கணேசன் | 71. | ஆர்.தங்கம் |
| 72. | கே.கண்ணன் | | | | |

தர்மபுரி மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 73. | ஆர். கனகராஜ் | 74. | கே.மாதையன் | 75. | எம்.நீலமேகம் |
| 76. | எல்.பத்ரிநாத் | 77. | வி.சண்முகம் | 78. | எம்.கோபாலகிருஷ்ணன் |
| 79. | ஆர்.அர்ஜீணன் | 80. | டி.தங்கராஜ் | 81. | பி.பி.இராமச்சந்திரன் |
| 82. | டி.எம்.சின்னசாமி | | | | |

புதுக்கோட்டை மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 83. | எஸ்.பிரபாகரன் | 84. | ரா.தமிழ்செல்வி | 85. | எம்.கே.சுந்தரராஜ் |

தேனி மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 86. | கே.ரவிச்சந்திரன் | 87. | கு.ரத்தினம் | 88. | பி.தங்கவேலு |
| 89. | சி.சந்திரசேகரன் | | | | |

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,**
சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்.